## இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு

## 2021-01

*நவம்பர் 17, 2021 அன்று வெளியிடுவதற்காக*

# குடியகல விரும்பும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் அரசாங்கத்தின் ஏமாற்றமடைந்த வாக்காளர்கள்

*கொவிட் உபாயங்கள் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் என்பவற்றின் மீதான அதிருப்தியுடன் தொடர்புடைய காரணங்கள், ஆனால் எதிர்கட்சிகள் பயனடையவில்லை*

**எழுதியவர்**: *ரவி பி. ரன்னன்-எலிய (Ravi P. Rannan-Eliya)* ஊடக விசாரணைகளுக்கு

டல்ரீன் பார்தெலொட் (Dalreen Barthelot)

மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள் (RECOMMENDED CITATION)

Institute for Health Policy, November 2021, "Increasing Numbers of Sri Lankans Want to Migrate, especially Youth and Disenchanted Government Voters", SLOTS Report #2021-01.

## *IHP இன் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு பற்றி*

*கொவிட்-19 இலிருந்து மீண்டு வரும் பொதுமக்களின் அனுபவம் மற்றும் கருத்துக்களை தொடர்ந்து கண்காணிக்க IHP இன் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு(SLOTS) தொடங்கப்பட்டது. இது இலங்கையில் கொழும்பில் உள்ள சுயாதீனமான, கட்சி சார்பற்ற ஆய்வு மையமான சுகாதார கொள்கை நிறுவனத்தினால்(IHP) நடத்தப்படுகிறது. SLOTS இன் முக்கிய ஆய்வாளர் IHPஐ சேர்ந்த மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொது கருத்துக்கணிப்பு செய்வதில் தேர்ச்சி பெற்றதுமட்டுமல்லாமல், மூன்று தசாப்தங்களாக பல்வேறு கருத்துக்கணிப்புகளை செய்த அனுபவம் உடையவர்.*

*வயதுவந்த இலங்கையர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாதிரிகளோடு ஒவ்வொரு மாதமும் அவர்களின் தற்போதைய கண்ணோட்டம் மற்றும் சூழ்நிலை குறித்து தொலைபேசி மூலம் SLOTS நேர்காணல் செய்கின்றது. கேள்வித் தொகுப்பில் ஒரு பகுதி அனைத்து நேர்காணல்களுக்கும் பொதுவானது. சமகால முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக கூடுதலாக சில கேள்விகள் சுழற்சி முறையில் கேட்கப்படுகின்றன. இந்த ஆய்வு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை மற்றும் பிறரின் பெருந்தன்மையான நிதி ஆதரவினால் நடைமுறைபடுத்தப்பட்டது. இந்த ஆய்வு ஒரு omnibus அதாவது பல தலைப்புகளை உள்ளடக்ககூடிய ஆய்வாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வினைத் தொடர்வதற்கு, மேலும் கேள்விகளைச் சேர்ப்பதற்கு, அல்லது தரவினைக் கொண்டு வரையறுக்கப்பட்ட பகுப்பாய்வினை மேற்கொள்ளுவதற்கான ஆதரவை இந்த மையம் வரவேற்கின்றது. சாத்தியமான ஆதரவாளர்கள் மற்றும் ஆதரவு வழங்க விரும்புவர்கள் மேலதிக விபரங்களுக்கு மையத்துடன் தொடர்புகொள்ளவேண்டும்.*

*SLOTS ஆய்வில் பதிலளித்தவர்கள், முன்தொடர்பில்லாமல் எழுமாற்றமாகத் தெரிவு செய்த தொலைபேசி எண்ணை அழைத்ததன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் மற்றும் தேசிய குழு (முன்பு ஆய்வில் முன்தொடர்பில்லாமல் எழுமாற்றமாகத் தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றியவர்கள்) ஒன்றில் மீண்டும் நேர்காணலில் பங்குபற்ற ஒப்புக்கொண்டவர்களும் என கலந்து உள்ளனர். எந்த ஒரு ஆய்விலும் தேர்வின் வடிவமைப்பினாலும், (பங்குபற்றுபவர்கள்) பதிலளிக்க மறுப்பதனாலும் ஒருபுறச் சாய்வு(bias) ஏற்படலாம். இது பதிலளிப்பவர்கள் தேசிய மக்கள் தொகையின் பிரதிநிதிகள் அல்ல என்று பொருட்படும். வேறுவிதமாக குறிப்பிட்டிருந்தாலே ஒழிய, அறவிக்கப்பட்ட அனைத்து மதிப்பீடுகளும் (all reported estimates) பகுப்பாய்வுகளும் (analyses) நிறையிட்ட (weighted) தரவுகள் கொண்டு கணக்கிடப்பட்டன. இதன் மூலம் பதிலளிப்பவர் குழு தேசிய மக்கள் தொகையின் பிரதிநிதி என உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டது. இயற்கையான சாய்வினை கணக்கில் எடுக்கும் நிறைகளின் மூலமும் மற்றும் "Raking" எனும் பகுப்பாய்வு முறையின் மூலமும் நிறைகள் கணக்கிடப்பட்டன. இவ்வாறு நிறைகளை கணக்கிடும் பகுப்பாய்வு முறைகளினால் தேசிய சனத்தொகையின் பாலினம், வயது, இனக்குழு, மதம், சமூக பொருளாதார தரவரிசை, கல்வி, துறை மற்றும் அமைவிட விகுதியோடு பதிலளிப்பவர் குழுவின் விகுதியின் இணைப்பு மற்றும் போக்கு பலமுறை கணக்கிடப்படும்.*

© *சுகாதார கொள்கை நிறுவனம் 2021*

# குடியகல விரும்பும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் அரசாங்கத்தின் ஏமாற்றமடைந்த வாக்காளர்கள்


*கொவிட் உபாயங்கள் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் என்பவற்றின் மீதான அதிருப்தியுடன் தொடர்புடைய காரணங்கள், ஆனால் எதிர்கட்சிகள் பயனடையவில்லை*

அரசாங்கத்திற்கு வாக்களித்த இளைஞர்கள் தற்போது வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டு பெற வரிசையிட்டு நிற்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ச அண்மையில் அவதானித்தார்[1]. கடந்த தசாப்தங்களில் லட்சக்கணக்கான இலங்கையர்கள் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வேலைக்காக வெளியேறும் குடியகல்வு கலாச்சாரம் இலங்கையில் உள்ளது, எனவே குடியகல்வதற்கான விருப்பம் புதியதல்ல, ஆனால் வெளியேறிச் செல்வதற்கான விருப்பம் வளர்ந்து விட்டதா?

27% இலங்கையர்கள், வாய்ப்புக் கிடைத்தால் குடியகல்ந்து செல்ல விரும்புவதாக இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு (SLOTS) தரவுகள் குறிப்பிடுகின்றன. அதிலும் இளைய மற்றும் படித்த நபர்கள் குடியகல அதிக விருப்பம் தெரிவிக்கிறன்றனர். குடியகல விரும்புவோர்களில், 4 இல் 1 க்கு அவ்வாறு செய்ய திட்டங்கள் உள்ளன, அல்லது 16 இலங்கையர்களில் 1 க்கு அத்திட்டங்கள் உள்ளன.

**பல இலங்கையர்கள் குடியகல்ந்து செல்ல விரும்புகிறார்கள், அதற்கான திட்டங்களையும் கொண்டுள்ளனர்**

*வாய்ப்பு கிடைத்தால் குடியகல்ந்து செல்ல விரும்புவதாகக் கூறுபவர்கள் %, மற்றும் குடியகல விரும்பி அதற்காக திட்டமிடும் அல்லது அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியவர்கள் %*




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு**

*செப். 21 – நவ.14, 2021 காலப்பகுதியில் 746 வயதுவந்தவர்களிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு—குடியகல்வதற்கான விருப்பத்தைக் குறிப்பிடும் நபர்களின் ஒரு உபதொடை—முறையே +/-4% மற்றும் +/-6% வழு எல்லைகளுடன். மட்டந்தட்டியமை காரணமாக எண்களின் கூட்டுத்தொகை 100% ஆக இல்லாமல் இருக்கலாம். பதில்கள் அல்லாதவை விலக்கப்பட்டுள்ளன, இவை ஆரம்ப குடியகல்வு கேள்விகளின் 2% ஆகும்.*

SLOTS கணக்கெடுப்பு புதியது என்பதால் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுவது கடினம், ஆனால் அதே கேள்விகளைப் பயன்படுத்திய முன்னைய கணக்கெடுப்புகளுடன்[2] ஒப்பிடுகையில், குடியகல விரும்பும் இலங்கையர்களின் எண்ணிக்கை 3-5 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட அநேகமாக இரு மடங்காக அதிகரித்துள்ளது என்பதைக் குறிக்கிறது. கொவிட்-19 காரணமாக விதிக்கப்பட்ட உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன், இலங்கையிலிருந்து சட்டப்பூர்வ மற்றும் ஆவணப்படுத்தப்படாத சாத்தியமான குடியகல்வுக்கான நியாயமான குறிகாட்டியாக இதை எடுத்துக்கொள்ளலாம்.


வாய்ப்புக் கிடைத்தால் பெண்களை விட ஆண்களே அதிகளவில் குடியகல விரும்புகின்றனர், ஆனால் குடியகல்வதற்கான அதிகளவு விருப்பத்தை வெளிப்படுத்தும் குழுக்கள் இளைஞர்கள் (வயது 18–29 வருடங்கள்)

*மற்றும் பல்கலைக்கழக பட்டதாரிகள் ஆகும், இக்குழுக்கள் வாய்ப்புக் கிடைத்தால் குடியகல விரும்புபவர்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களில் ஏறத்தாழ 2 இல் 1 நபர் , வாய்ப்பு கிடைத்தால் குடியகல விரும்புபவர்களில் ஏறத்தாழ 5 இல் 2 நபர்கள் ஆகும். எவ்வாறாயினும், குடியகல்வதற்கான விருப்பத்தை திட்டங்களுக்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கையில், சிறந்த வளமுடையவர்கள் மற்றும் அதிகம் படித்தவர்கள் இடையே அதற்குரிய ஏற்பாடுகளை ஆரம்பித்தற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், தனிப்பட்ட வளங்களும் இலங்கையர்கள் குடியகல்வதை இயலச்செய்யும் ஒரு முக்கிய காரணியாகும் என்பதை இது விளக்குகிறது.*

*இளைஞர்களே அதிகளவில் குடியகல்ந்து செல்ல விரும்புவதால், இளைஞர்கள் தான் அதிகம் குடியகல்வதை விரும்புகிறார்கள் என்ற பிரதமர் ராஜபக்சவின் கருத்து சரியானதாகத் தோன்றினாலும், இது அரசாங்கத்தின் மீதான ஏமாற்றத்தின் காரணமாக என்பதைப் பின்தொடரவில்லை. ஆனால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தாங்கள் எப்படி வாக்களித்தார்கள் என்பதில் வாக்காளர்களின் ஏமாற்றம் கணிசமான அளவிலுள்ளது. 2019 ஆம் ஆண்டில் தாங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு (அல்லது 2020 இல் SLPP மற்றும் SLFP க்கு) வாக்களித்ததாக பதிலளித்தவர்களில், 3 இல் 1 நபர் —இங்கு "ஏமாற்றமடைந்த கோட்டாபய ராஜபக்ச வாக்காளர்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்— இன்று ஒரு தேர்தல் நடந்தால் எப்படி வாக்களிப்பீர்கள் என்று கேட்டதற்கு ஜனாதிபதி ராஜபக்சவைத் தேர்ந்தெடுக்கவில்லை. சிலர் வேறு நபர்களைக் குறிப்பிட்டனர், ஆனால் பெரும்பாலானவர்கள் தாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று பதிலளித்தனர் அல்லது பதிலளிக்க மறுத்துவிட்டனர், இது அதிகளவிலான அரசாங்கத்தின் மீதுள்ள ஏமாற்றம் இன்னும் எதிர்க்கட்சிக்கு ஆதரவாக மாற்றியமைக்கப்படவில்லை என்பதை எடுத்துரைக்கிறது. குடியகல்வதற்கான அதிகரித்த விருப்பமானது சிறந்த பலன் தரும் மாற்றத்தை வழங்குவதற்கான அரசியலமைப்பின் திறனைப் பற்றிய பரந்த அவநம்பிக்கையை பிரதிபலிக்கக்கூடும் என்பதையும் இது எடுத்துரைக்கிறது.*

**நன்கு படித்த மற்றும் ஏமாற்றமடைந்த கோட்டாபய ராஜபக்ச வாக்காளர்கள் அதிகளவில் குடியகல விரும்புகின்றனர்**

*அனைத்து வயது வந்தவர்கள் மற்றும் 2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்ததாக தெரிவிப்பவர்களில் குடியகல்வதற்கான விருப்பத்துக்கான காரணிகள் தொடர்பான ஒப்பீட்டு செல்வாக்கு*




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு**


*மற்ற எல்லோருடனும் ஒப்பிடும்போது குடியகல விரும்புவதற்கான ஒப்பீட்டு சாத்தியக்கூறுகளை நிரல்கள் குறிப்பிடுகின்றன. பாலினம், வயது, கல்வி, இனம், பொருளாதார மட்டம், மாகாணம், மற்றும் குடியிருக்கும் பகுதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மாதிரியிலிருந்து மதிப்பிடப்பட்ட விளைவுகள் கொணரப்பட்டன, மற்றும் இது ஒவ்வொரு காரணியின் சுயாதீனமான செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக, மற்ற காரணிகளைக் கணக்கிட்ட பிறகு நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் கிராமப்புறங்களில் வசிப்பவர்களை விட 2.0 மடங்கு அதிகமாக (அல்லது 100% அதிகமாக) குடியகல்வதற்கு விரும்புகிறார்கள். நிரப்பப்பட்ட நிரல்கள் புள்ளிவிபரரீதியாக 10% இல் குறிப்பிடத்தக்கவாறுள்ளது, மற்றும் வெற்று நிரல்கள் புள்ளிவிபரரீதியாகக் குறிப்பிடத்தக்கவை அல்ல, * அடையாளம் 5% இல் முக்கியத்துவத்தை குறிக்கிறது, மற்றும் ** அடையாளம் 1% இல் முக்கியத்துவத்தை குறிக்கிறது. செப். 21–நவ. 14, 2021 காலப்பகுதியில் 746 வயதுவந்தவர்களிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு, மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்ததாக கூறியவர்களும் பொருளாதாரம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்தவர்களும் இதன் உபதொடைகளாகும். மட்டந்தட்டியமை காரணமாக எண்களின் கூட்டுத்தொகை 100% ஆக இல்லாமல் இருக்கலாம்.*

*அனைத்து காரணிகளையும் ஒன்றாகக் கணக்கெடுக்கும்போது, சிலது மட்டுமே குடியகல்வதற்கான விருப்பத்தின் மீது கணிசமானளவு சுயாதீனமான செல்வாக்கைக் கொண்டுள்ளது[3]. இவை இளைஞர், ஆண், அதிகம் படித்தவர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் நகரப்புறங்களில் வசிப்பவர், மற்றும் பொருளாதார ரீதியில் மேம்பட்டவராக இருப்பவர்களை உள்ளடக்குகின்றன. ஆனால் ஜனாதிபதி ராஜபக்சவுக்கு வாக்களித்த வயதுவந்தவர்களிடையே, பட்டப்படிப்பு படித்ததனாலும் மற்றும் அதிக வருமானம் பெறுவதனாலும், குடியகல்ந்து*

*செல்வதற்கான விருப்பம் இன்னும் வலுவாகத் தூண்டப்படுகிறது, அதே சமயம் மற்ற ராஜபக்ச வாக்காளர்களை விட —இங்கு "விசுவாசமான கோட்டாபய ராஜபக்ச வாக்காளர்கள்" என குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்— ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்கள் மூன்று மடங்கு அதிகமாக குடியகல்வதற்கான விருப்பத்தைக் கொண்டுள்ளனர். அரசாங்கத்தின் மீது ஏற்பட்ட ஏமாற்றம் முன்னாள் ஆதரவாளர்களை குடியகலத் தள்ளுகிறது, என்ற பிரதமர் ராஜபக்சவின் இரண்டாவது கருத்தை இது உறுதிப்படுத்துகிறது, ஆனால் நன்கு படித்த மற்றும் வளம்மிக்க ராஜபக்ச வாக்காளர்களே குடியகல்வதற்கு அதிகமாகத் தள்ளப்படுகிறார்கள்.*

*பொருளாதாரத்தில் நம்பிக்கையின்மையும் மற்றும் கொவிட்-19 நடவடிக்கைகளின் மீதான அதிருப்தியும் ஏமாற்றத்தின் முக்கிய காரணங்களாக உள்ளன. ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்கள் விசுவாசமான ராஜபக்ச வாக்காளர்களைப் போல் தான் தங்கள் வீட்டின் நிதிநிலைமையை மதிப்பிடுகின்றனர். 56% விசுவாசமான வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது, இவர்களில் 66% பேர் ஒரு வருடத்திற்கு முன் இருந்த நிலைமையை ஒப்பிடுகையில் அவர்களின் வீட்டின் நிலைமை மோசமடைந்துள்ளது என்று கூறினர். இதை ஒட்டுமொத்த வயதுவந்தவர்களுடன் (65%) ஒப்பிடும் போது பெரிய வித்தியாசம் ஏதுமில்லை. எனினும் பொருளாதார வாய்ப்புவளத்தைப் பொருத்தவரையில் ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்களின் நம்பிக்கையின்மை அதிகம். 66% பேர் ஒரு வருடத்தில் பொருளாதாரம் மோசமடையும் என்று கூறினர்[4]. வெறும் 59% விசுவாசமான ராஜபக்ச வாக்காளர்களுடன் ஒப்பிடுபோது இது அதிகம், ஆனால் ஒட்டுமொத்த பொதுமக்களை(72%) விட அவர்களுக்கு நம்பிக்கையின்மை குறைவாக உள்ளது. இது 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு முன், 56% இலங்கையர்கள் ஒரு வருட காலத்தில் பொருளாதார வளம் மேம்படும்[5] என்று கூறியதிலிருந்து பொதுமக்களின் நம்பிக்கையில் பெரும் சரிவைக் காட்டுகின்றது.*

**விசுவாசமான வாக்காளர்களைக் காட்டிலும் ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்களிடம் பொருளாதாரத்தைப் பற்றி அதிக நம்பிக்கையின்மை**





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு**


*பதில்கள் அல்லாதவை விலக்கப்பட்டுள்ளன, இவை இரண்டு கேள்விகளினதும் முறையே 19% மற்றும் 3% ஆகும். செப். 21–நவ. 14, 2021 காலப்பகுதியில் 746 வயதுவந்தவர்களிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு, மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்ததாக கூறியவர்களும் பொருளாதாரம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்தவர்களும் இதன் உபதொடைகளாகும். மட்டந்தட்டியமை காரணமாக எண்களின் கூட்டுத்தொகை 100% ஆக இல்லாமல் இருக்கலாம்.*

*அரசின் கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைகள் மீது விசுவாசமான ராஜபக்ச வாக்காளர்களை விட ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்கள் குறைவாகத் திருப்தி அடைந்துள்ளனர். அரசின் கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைகளை அவர்கள் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள் என்று கேட்டபோது 47% பேர் மட்டுமே நன்று என மதிப்பிட்டனர். இது விசுவாசமான வாக்காளர்களின் சதவீதத்தை விட(74%) மிகவும் குறைவாகும். இவர்கள் எதிர்காலத்தில் கொவிட்-19 ஐ மேலும் பலமாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றனர். நாடு கொவிட் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் நேரத்தில் எத்தனை கொவிட் இறப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை எனக் கேட்டபோது ஏமாற்றமடைந்த வாக்காளர்களில் கிட்டத்தட்ட அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் (46%) வருடமொன்றுக்கு 100 இலும் குறைவான இறப்புகள் எனப் பதிலளித்தனர். இதை 77% விசுவாசமான வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது, அவர்கள் அதிக இறப்பு எண்ணிக்கையை ஏற்றுக்கொள்ள தயார், மேலும் அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்காளர்கள் வருடமொன்றுக்கு 1,000 இறப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை என கருதுகின்றனர்.*

*ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்களின் வைரஸின் தீவிர கட்டுப்பாட்டிற்கான விருப்பம் அவர்களின் மற்ற அபிப்பிராயங்களில் பிரதிபலிக்கின்றது. வைரஸின் தீவிர கட்டுப்பாட்டிற்கான விருப்பத்தின் ஒருங்குசேர் சுட்டெண் விசுவாச வாக்காளர்களை விட ஏமாற்றமடைந்த ராஜபக்ச வாக்காளர்கள் கூடுதலான வைரஸ் கட்டுப்பாட்டினை ஆதரிப்பதைக் காட்டுகின்றது. ஒருங்குசேர் சுட்டெண் என்பது பல கேள்விகளின் பதில்களை ஒன்று சேர்த்து ஒரு குறியீடாக வழங்குவது[6]. கொவிட்-19 கட்டுப்பாட்டை பொருத்தவரை அவர்களின் கண்ணோட்டம் ஒட்டுமொத்த பொதுமக்களின் கண்ணோட்டத்தையும் ஜனாதிபதி ராஜபக்சவிற்கு வாக்களிக்காதவர்களின் கண்ணோட்டத்தையும் ஒத்து இருப்பதைக் காணலாம். 2021 இன் ஆரம்பக்கட்டம் முதல் கொவிட்-19 பரவலின் உத்தியோகப்பூர்வ சகிப்பு அரசுக்கான ஆதரவைப் பெருமளவில் பாதித்துள்ளது என்பதை இது குறிக்கின்றது.*

***ஏமாற்றமடைந்த கோட்டாபய ராஜபக்ச வாக்காளர்கள் பொருளாதாரம் பற்றி அதிக நம்பிக்கையின்மை கொண்டுள்ளனர், அரசாங்கத்தின் கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைகள் மோசமானது என மதிப்பிடுகின்றனர், மேலும் விசுவாசமான ராஜபக்ச வாக்காளர்களை விடக் குறைவான கொவிட்-19 இறப்புகளை ஏற்க தயாராக உள்ளனர்.***




***சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு***

*பதில்கள் அல்லாதவை விலக்கப்பட்டுள்ளன, இவை இரண்டு கேள்விகளினதும் முறையே 5% மற்றும் 28% ஆகும். செப். 21–நவ. 14, 2021 காலப்பகுதியில் 746 வயதுவந்தவர்களிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு, மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்ததாக கூறியவர்களும் பொருளாதாரம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்தவர்களும் இதன் உபதொடைகளாகும். மட்டந்தட்டியமை காரணமாக எண்களின் கூட்டுத்தொகை 100% ஆக இல்லாமல் இருக்கலாம்.*

*சுருக்கமாக, SLOTS பதில்கள், இலங்கையரகள் குறிப்பாக இளைஞர்களிடையே, குடியகல்வு முயற்சியில் எழுச்சி ஒன்று காணப்படுகிறது என்ற பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கூற்றினை உறுதிபடுத்துவதோடு வாக்காளர்களுக்கு அரசாங்கத்திடம் உள்ள ஏமாற்றம் தான் இதற்கு முக்கிய காரணம் என்பதையும் உறுதிபடுத்துகின்றன. இந்த அதிருப்திக்கு பெரும் காரணம், பொருளாதார வாய்ப்பு வளம் பற்றிய தோல்வி மனப்பான்மை மற்றும் கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைககளின் மீதுள்ள அதிருப்தியும் தான் எனக் குறிக்கின்றன. குறிப்பாக "வைரஸுடன் வாழ்வோம்" என்று இல்லாமல் மேலும் பலமான கொவிட்-19 கட்டுப்பாட்டை விரும்புவதைச் சுட்டிக்காட்டுகின்றன. இதிலுள்ள ஒரேயொரு நேர்மறையான அம்சம் என்னவென்றால் ராஜபக்ச வாக்காளர்கள் அவர்களின் ஆதரவை பிற கட்சிகளுக்கு மாற்றியதாக தெரியவில்லை. ஆனால் இது காலப்போக்கில் மாறலாம். மேலும் தேசிய கண்ணோட்டத்தில் பார்த்தால் இளைஞர்கள், அதிகம் படித்தவர்கள் மற்றும் வசதி உடையவர்கள், இவர்கள் அனைவரும் குடியகல்வதனால் ஏற்படும் அழுத்தம் நாட்டின் எதிர்கால பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புவளத்திற்கு நல்லதல்ல.*

## தொழில்நுட்ப குறிப்புகள்

*[1] ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஐந்தாவது ஆண்டுவிழா கருத்துரையிலிருந்து (SLPP), நவம்பர் 2, 2021*

[2] குடியகல்வு கேள்விகள், இலங்கை உள்பட 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் நடத்தப்பட்ட மற்றும் குடியகல்வு போக்குடன் நன்றாக பொருந்தும் தரவுகொண்ட கேல்லப் உலகக் கருத்துக்கணிப்பிலிருந்து (Gallup world poll) எடுக்கப்பட்டன.

[3] குடியகல்வு விருப்பத்தை பாதிக்கும் பல்வேறு காரணிகளின் சார்பற்ற செல்வாக்கின் மதிப்பீடுகளை 'லாஜிஸ்டிக்' (logistic) மாதிரிகளின் தொடர்பு பகுப்பாய்வுகொண்டு கணக்கிடப்பட்டன. பல்வேறு காரணிகளும் மக்கள்தொகை காரணிகளும் மாரிகளாக சேர்க்கப்பட்டன.தெரிவிக்கப்பட்ட இரு மாதிரிகளின்(models) நிகழ்வாய்வு விகித்ததிற்கான 'கை' இருபடி வர்க்கம் (chi-square) $\chi 2=72.3$, $p<.0001$ and $\chi 2=53.3$, $p=<.0001$ ஆவன.

[4] வரும் 12 மாதங்களில் பொருளாதாரம் தொடர்பான எதிர்பார்ப்பை பற்றி பதில் ஏதும் இல்லையென்றால் அடுத்த ஐந்து ஆண்டுக்கான எதிர்ப்பார்பைப்பற்றி அளித்த பதில்கள் உள்ளடக்கப்பட்டன.

[5] 2018 – 2019 இல் நடந்த இலங்கை சுகாதார மற்றும் வயோதிப கணெக்கெடுப்பு அலை 1 ஆய்வின் கண்டுபிடிப்புகள்.

[6] ஒருங்குசேர் சுட்டெண்: (i) வைரஸைக் கட்டுப்படுத்துவதா அல்லது வணிகங்களையும் மற்றும் மக்களையும் சாதாரண வாழ்க்கையை தொடரவிடுவதா என்பது குறித்து மக்களின் தற்போதைய விருப்பம்; (ii) ஆகஸ்ட் 2021 இல் செயல்படுத்தப்பட்ட முடக்கம் முன்னமே தொடங்கி இருக்க வேண்டுமா அல்லது பின்னர் தொடங்கி இருக்க வேண்டுமா; (iii) வைரஸை முடக்குவது அல்லது அடுத்த ஆண்டில் அதனை ஏற்றுக்கொண்டு அதனோடு வாழ்வது என்ற இரு கருத்துக்களுக்கு இடையிலான சமரசம்; (iv) வரும் ஆண்டில் எத்தனை கொவிட்-19 இறப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடியது என பதிலளிப்பவர்கள் நினைக்கின்றார்கள், போன்ற கேள்விகளுக்கான பதில்களை ஒருங்கிணைக்கின்றது.